2026 ஏப்ரல் மாதம் 30– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 170/2021

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30– ஆம் தேதி வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.3–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 – சுந்தரபோஸ் |
| தந்தை பெயர்: | பழனிச்சாமி |
| ஊர்: | வீரபாண்டி |
| வட்டம்: | பல்லடம் |
| மாவட்டம்: | திருப்பூர் |
| தொழில்: | தொழில் |
| வயது : | 41 |

30.04.2026

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 3 வது சாட்சியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் D.M.E., வரை படித்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது அம்மாவும், பெரியம்மாவும் என்ன பரிகாரங்கள் கோரியுள்ளார்கள் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். என்னென்ன பரிகாரங்கள் கோரியுள்ளார்கள் என்றால் எனது அம்மாவையும், பெரியம்மாவையும் பங்கினை மோசடியாக பெற்றதை ரத்து செய்து அவர்களுக்கு மீட்டுத்தருமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இதை தவிர வேறு பரிகாரங்கள் கோரவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா எந்த ஆண்டு இறந்துபோனார் என்றால் 2006ம் ஆண்டு ஆகும். 2006ம் ஆண்டு முதல் வாதிகளான எனது அம்மாவும், எனது பெரியம்மாவும் பங்கு கோரி வருகிறார்கள் என்றால் சரிதான்.

2. 2013ம் ஆண்டு வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு பாகப்பாத்திய விடுதலை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் கேஸ் குடோன் வைப்பதாக செக்யூரிட்டி என்று சொல்லி எழுதி வாங்கினார்கள், விடுதலை பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை. வா.சா.ஆ.2 பத்திரம் எழுதும்போது நான் உடனிருந்தேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.2 பத்திரத்தில் 1வது சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பத்திரத்தில் பாகப்பாத்திய விடுதலை பத்திரம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2006ம் ஆண்டிலிருந்து பாகம் பிரித்துக்கொடுக்கச் சொல்லி கேட்டோம் என்றும், 2013ல் பாகப்பாத்திய விடுதலை பத்திரம் வாதிகள் எழுதிக்கொடுத்தார்கள் என்றாலும், வழக்கிற்காக அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 1986ம் ஆண்டு எனது தாத்தா 1ம் பிரதிவாதியான எனது மாமாவிற்கு விடுதலை எழுதிக்கொடுத்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். 2ம் பிரதிவாதி கெப்பம்மாளுக்கும் எனது தாயார் 1ம் வாதிக்கும் பிரச்சனை இல்லை என்றால் சரிதான். உண்மை விபரங்களை தெரிந்து கொண்டு பணம் பறிக்க நோக்கத்துடன் வாதிகளுக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2006ம் முதல் எனக்கும், எனது மாமாவிற்கும் பிரச்சனை இருந்த வந்த காரணத்தினால், வழக்கு காலாவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் ஆவணங்களுக்கு முரண்பட்டு உள்ளதால் முரண்தடை கோட்பாட்டிற்கு உட்பட்டது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு வழக்கு தாக்கல் செய்ய விருப்பம் இல்லை என்றாலும், நான் தான் அவர்கள் மூலம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.04.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.30 11:52:18 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
30.04.2026.